Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 284/2025** |
| Deposition of witness for | :: | **PW. 1** |
| Name | :: | **சுபாஷ் சந்திரபோஸ்** |
| Father's Name | :: | **சரவணன்** |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் .**
**06.05.2026**
**முதல் விசாரணை**:

1. நான் அருப்புக்கோட்டை தாலுகா சவ்வாஸ்புரம் கிராமத்தல் குடியிருந்து ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 14.04.2025ம் தேதி இரவு சுமார் 09.25 மணியளவில் எங்கள் வீட்டில் இருந்து எனது அப்பா சரவணன் அவருக்கு சொந்தமான TN 67 CZ 8550 என்ற இருசக்கர வாகனத்தை எடுத்து கொண்டு பழம் வாங்குவதற்காக திருச்சுழி பிரதான சாலை பக்கமாக சென்றார். அன்று இரவு சுமார் 09.45 மணியளவில் எனது பக்கத்து வீட்டுக்காரான ஜெயபால் எனக்கு போன் செய்து ராமலிங்கா மில் பெட்ரோல் பல்க் அருகே எனது அப்பாவிற்கு விபத்து ஏற்பட்டுவிட்டதாக கூறினார். உடனே நானும், எனதுமாமா சுரேந்தரும் விபத்து ஏற்பட்ட இடத்திற்கு சென்றோம். எனது அப்பாவை பார்த்தபோது அவருக்கு முகத்திலும், வலது கை மற்றும் இடது கால் முட்டியிலும் பலத்த காயம் இருந்தது. பின்னர் ஆம்புலன்ஸ் மூலமாக எனது அப்பாவை அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம்.

2. பின்னர் மேல்சிகிச்சைக்காக எனது அப்பாவை மதுரை வேலம்மாள் தனியார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். மேற்படி ஜெயபாலிடம் விபத்து பற்றி கேட்டு தெரிந்து கொண்டேன், அவர்

என்னிடம் எனது அப்பா ராமலிங்கா மில் பெட்ரோல் பல்க்கில் பெட்ரோல் போடுவதற்காக ராமலிங்காபுரம் – அருப்புக்கோட்டை சாலையில் சென்று கொண்டிருந்ததாகவும், எதிரே அருப்புக்கோட்டை பக்கமிருந்து வந்த ஒரு இருசக்கர வாகனமானது அதிவேகமாக வந்து எனது அப்பாவின் மீது மோதியதாக என்னிடம் கூறினார். பின்னர் சம்பவம் தொடர்பாக 15.04.2025ம் தேதி அருப்புக்கோட்டை தாலுகா காவல் நிலையத்திற்கு நான் நேரில் வந்து புகார் கொடுத்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் புகார்மனு மற்றும் அதிலுள்ள கையெழுத்து என்னுடையது. **(புகார்மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் முதல் விசாரணையில் கூறிய விசயத்தை தான் போலீசார் விசாரணையிலும் கூறினேன் என்றால் சரிதான். போலீசார் என்னை எப்போது விசாரணை செய்தார்கள் என்றால் 14.04.2025ம் தேதி இரவிலேயே விசாரணை செய்தார்கள். எனது அப்பாவிடம் ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். சம்பவத்தன்று நான் ஆஜர் எதிரியை பார்த்தேனா என்றால் பார்த்தேன், எனது அப்பாவையும், எதிரியையும் ஒரே ஆம்புலன்சில் தான் அழைத்து சென்றோம். எதிரிக்கு முட்டியில் அடிபட்டு இருந்தது. எனது அப்பாவிற்கு ஏற்பட்ட காயத்திற்கு இழப்பீடு வாங்க வேண்டும் என்று போலியாக எதிரியின் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் அதற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

2. எதிரியிடம் முறையான ஓட்டுநர் உரிமம் உள்ளது என்றாலும் அதனால் அவர் கவனத்துடன் தான் வாகனத்தை ஓட்டினார் என்றாலும் சரியல்ல. எனது தந்தையிடம் முறையான ஓட்டுநர் உரிமம் இல்லாமல் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் எனது தந்தை திடீரென்று பெட்ரோல் போடுவதற்காக சாலையின் குறுக்கே கடக்க முயற்சி செய்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றாலும் அதற்கு எதிரி காரணம் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை**